UNDER SECTION 173 BNSS

FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை

~~(Under Section 154 Cr.P.C)~~
~~(குற்றவியல் நடைமுறைச் சட்டம் 154 இன் கீழ்)~~

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8213024

1. District : மாவட்டம் Theni — PS: காவல்நிலையம் VAAC, Theni — Year: ஆண்டு 2025 — FIR No.: முத.அ. எண் 03/25 — Date: நாள் 18.11.2025

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption Act, 1988 as amended by the PC (Amendment) Act, 2018. — Sections பிரிவுகள்: 7

(ii) Act சட்டம்: — Sections பிரிவுகள்:

(iii) Act சட்டம்: — Sections பிரிவுகள்:

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் — Date from நாள் முதல் 17.11.2025 — Date to : நாள் வரை 18.11.2025

Time Period : நேர அளவு — Time from : நேரம் முதல் — Time to : நேரம் வரை

(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 18.11.2025 — Time : நேரம் 18.00hrs

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 18.11.2025 — Time : நேரம் 20.00hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Computer Typed Petition.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் About 4okms, Southwest

Beat Number : முறைக் காவல் எண்

(b) Address : முகவரி 2ஆம் மின் பொறியாளர் அலுவலகம், தேனி மின் உபகோட்டம் மற்றும் பற்றாளர் கழகம், தேவாரம் – I - மார்க்.

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் — District : மாவட்டம்

—

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் M. Ramachandran — (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் C.K. மணி (Late)

(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு

(d) Nationality : நாட்டினம் Indian

(e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : வழங்கப்பட்ட நாள்

Place of Issue : வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : தொழில் Farmer

(g) Address : முகவரி Ward no: 10, Door no: 50, Mallinga kud street, Uthamapalayan Taluk, Thevaram, Theni District.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

TR. வடிவேலன், 2ஆம் மின் பொறியாளர் (A.E) 2ஆம் மின் பொறியாளர் அலுவலகம், தேனி மின் உபகோட்டம் மற்றும் பற்றாளர் கழகம், தேவாரம் – I - மார்க்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

—

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் கருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

— Computer typed separate sheets enclosed —

—

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

T.R.I. 18.11.2025
Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
19-11-25 / 06.00 hrs

Name: பெயர் T. RAMESWARI
Rank: நிலை ..... No. எண் .....
Inspector of Police,
Vigilance & Anti Corruption,
Theni District.

12. F.I.R. contents (Attach separate sheet if required):
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தேனி, ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்புபிரிவு குற்ற எண்.03/2025-ன் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி.

சமர்ப்பிக்கப்படுகிறது: தேனி, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, காவல் ஆய்வாளர் ஆகிய நான் இன்று 18.11.2025-ம் தேதி 18.00 மணிக்கு தேனி ஊ.த.க பிரிவு அலுவலகத்தில் பணியில் இருந்தபோது, தேனி மாவட்டம், உத்தமபாளையம் தாலுகா தேவாரம், மல்லிங்கர் கோவில் தெரு, வார்டு நம்பர்: 10, கதவு எண்: 50 ல் வசிக்கும் C.K. மணி,(லேட்) அவர்களின் மகன் திரு. M. ராமச்சந்திரன், வயது 31 என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமான புகாரின்பேரில் கீழ்க்கண்ட முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படுகிறது. புகாரின் விபரம் பின்வருமாறு:- நான் தேவாரத்தில் மேற்கண்ட முகவரியில் சொந்த வீட்டில் வசித்துவருகிறேன். நான் BE மெக்கானிக்கல் என்ஜினியரிங் படித்துள்ளேன். நான் தற்போது விவசாயம் செய்து வருகிறேன். 2017ம் வருடம் முதல் 2022 நவம்பர் வரை CRPF ல் பணிபுரிந்து குடும்ப சூழ்நிலை காரணமாக விருப்ப பணி ஓய்வு பெற்றேன். எனது அப்பா C.K.மணி கடந்த 09.05.2024ம் தேதி உடல்நிலை சரியில்லாமல் இறந்துவிட்டார். எனது அப்பா மணி பெயரில் தேவாரம் வருவாய் கிராமத்தில் சர்வே எண்: 728/2A வில் பட்டா எண்: 8082ன்படி 31.50 ஏர்ஸ் புன்செய் நிலம் உள்ளது. அதில் தென்னந்தோப்பு உள்ளது. என் அப்பா உயிரோடு இருந்தபோதே அந்த நிலத்தில் விவசாய சுயநிதி திட்டத்தில் புதிய விவசாய மின் இணைப்பு பெறுவதற்கு அவர் பெயரில் விண்ணப்பம் செய்ததன்பேரில் முன்பணம் ரூ.500/- தேனி மின்பகிர்மான வட்டம் மின்கட்டண ரசீது வரிசை எண்: 6693153, மின் இணைப்பு எண்: 517-07/13-357 படி 28.01.2022 தேதியும், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம், செயற்பொறியாளர் P.பிரகலாதன் அவர்களின் க.எண்: செ.பொ/பகிர்/தேனி /தொ.நு.உ/ கோ.கட்டு/அ.எண்/2022 நாள் 30.06.2022படி ரூ.9020/- ரசீது வரிசை எண் 6514419 படியும், செலுத்தப்பட்டுள்ளது. பின்னர் எங்களுக்கு தோப்பில் மீட்டர் பாக்ஸ் பொருத்தப்பட்டு மின் இணைப்பு கொடுக்கப்பட்டது.

இந்நிலையில் எங்களது நிலத்திற்கு பக்கத்து நிலத்தில் காட்டுப்பன்றி வருவதை தடுப்பதற்காக பால்பாண்டி என்பவர் கடந்த 2022ம் வருடம் மின் வேலி அமைத்திருந்தார். அதனை ஒட்டி எங்களது நிலத்தில் சாதாரண கம்பி வேலி அமைக்கப்பட்டிருந்தது. மேற்படி இரண்டு நில வேலிக்கம்பிகளும் ஒன்றுக்கொன்று தொடர்பில் இருப்பது தெரியாமலும் பக்கத்து நில மின்வேலிக்கு மின்சாரம் பாய்ந்துகொண்டிருப்பது தெரியாமலும் எனது அண்ணன் சூர்யபிரகாஷ் எங்களது நில வேலிக்கம்பியை தொட்டபோது மின்சாரம் உடலில் தாக்கிய விபத்தில் கடந்த 24.11.2022ல் உயிரிழந்தார். இது தொடர்பாக எனது அண்ணி பிரியங்கா என்பரால் புகார் கொடுக்கப்பட்டு தேவாரம் காவல் நிலைய குற்ற எண்:191/2022ன் படி வழக்கு பதிவு செய்யப்பட்டு விசாரணையின்போது பால்பாண்டி மற்றும் எனது அப்பாவை எதிரியாக சேர்த்து அந்த வழக்கானது தற்போது போடி நீதிமன்றத்தில் விசாரணையில் உள்ளது. இதன் தொடர்ச்சியாக எங்களுக்கு கொடுக்கப்பட்டிருந்த விவசாய மின் இணைப்பு, மின் வாரிய அதிகாரிகளால் துண்டிக்கப்பட்டது. மீட்டர் பாக்சும் எடுத்துச்செல்லப்பட்டது. மீண்டும் சுமார் 3 மாதம் கழித்து இந்த இலவச மின் இணைப்பு மீண்டும் மீட்டர்பாக்சுடன் அதிகாரிகள் எங்கள் தோப்பில் பொருத்தி அது இந்த மாதம் வரை பயன்பாட்டில் இருந்தது. இந்நிலையில் 14.11.2025ம் தேதி அந்த மீட்டர் பாக்சை முருகன் என்ற எங்கள் ஏரியா EB வயர்மேன் என்னிடம் நேரில் பார்த்து தேவாரம் உதவி மின் பொறியாளர் அலுவலகம், தேவாரம் 1 AE லட்சுமணன் சார் சொன்னபடி எங்கள் தோட்டத்திலிருந்து மின் இணைப்பு மீட்டர் பாக்சை அவர் அகற்றிவிட்டு எடுத்து செல்வதாகவும், மற்ற விபரங்களை AE சாரிடம் ஆபிஸ் போய் கேட்டுக்கொள்ளுமாறும் சொன்னார். நான் மறுநாள் சனிக்கிழமை காலை சுமார் 9 மணிக்கு தேவாரம் AE ஆபீஸ் போன போது AE சார் இல்லை. அங்கிருந்தவர்களிடம் அவர் போன் நம்பர் கேட்டு AE சாருக்கு போன் செய்ததில் அவர் போர்மேனை பார்க்குமாறும் போர்மேன் சொல்படி செய்யுமாறும் சொன்னார். அவர் பெயரைக் கேட்டதில் ஜாஹீர் ஹூசைன் என்று சொன்னார். அன்றையதினம் போர்மேனை பார்க்கமுடியவில்லை. மீண்டும் திங்கள் கிழமை 17.11.2025ம் தேதி மாலை சுமார் 3.15 மணிக்கு போர்மேனை AE தேவாரம் அலுவலகம் போய் பார்த்து விபரம் சொன்னேன். அவர் என்னிடம் எல்லா டாக்குமென்ட்டையும் எடுத்துக்கொண்டு ரூ.20,000/- பணத்துடன் AE லட்சுமணன் சாரை அவர் ஆபீசில் வந்து பாருங்கள்

என்று தெரிவிக்க சொன்னதாக சொன்னார். நான் ரூ.20,000/- பணம் எதற்கு என கேட்டதற்கு இப்பதான் உங்களுக்கு உண்மையான EB சர்வீஸ் வந்திருக்கு, நீங்கள் AE சாரை பாருங்கள் என்று சொன்னார்.அதன்படி இன்று 18.11.2025ம் தேதி காலை சுமார் 9 மணிக்கு AE லட்சுமணன் சாரை அவர் அலுவலகம் சென்று பார்க்க போனபோது அவர் போர்மேனுடன் அலுவலகம் அருகே சற்று தள்ளி ரோட்டில் EB பராமரிப்பு வேலைகளை கவனித்துக்கொண்டிருந்தார். நான் போய் அவரைப் பார்த்து எங்களது EB மீட்டர் பாக்சை, திரும்ப எப்போது வைத்து கனெக்சன் கொடுப்பீர்கள் என்று கேட்டேன். அவர் போர்மேன் பாய் என்ன சொன்னார் என என்னிடம் கேட்டார். நான் ரூ.20,000/- பணம் உங்களிடம் கொடுக்கச்சொல்லி நீங்கள் தெரிவித்ததாக போர்மேன் என்னிடம் சொன்னதாக சொன்னேன். அவரும் ஆமாம் என தலையசைத்து நீங்கள் ஏற்கனவே அரசு தலைப்பில் செலுத்திய கட்டணம் தவிர தனியாக தனக்கு ரூ.20,000/- பணத்தை கொடுத்துவிட்டால் உங்கள் அப்பா பெயரில் விவசாய EB சர்வீஸ் கனெக்சன் கொடுத்துவிடலாம் என்றார். நான் ஏற்கனவே சர்வீஸ் கனெக்சனுக்கு என் அப்பா பணம் கட்டிய ரசீது உள்ளது என்றேன். அதற்கு லட்சுமணன் சார் இது வீட்டு EB சர்வீஸ் இல்லை, விவசாய அக்ரி சர்வீஸ், லேட்டா தான் வரும். இப்பதான் சர்வீஸ் கொடுக்கச்சொல்லி வந்திருக்கு உங்க அப்பா உயிரோடு இருக்கும்போது அப்ளை பண்ணியதில் இப்ப நீங்க எனக்கு நான் கேட்ட பணம் கொடுத்து கவனிக்கவேண்டும். அப்போ தான் EB சர்வீஸ் கனெக்சன் கிடைக்கும். இந்த சர்வீஸ் கனெக்சன், இப்போது நீங்க்ள வாங்காவிட்டால் கேன்சலாகிவிடும். நீங்கள் நான் கேட்ட பணத்தை என்னிடம் கொடுத்து உன் அப்பா பெயரில் சர்வீஸ் கனெக்சன் வாங்கினால் பிற்காலத்தில் உங்கள் பெயரில் சொத்து பத்திரம் பாக பிரிவினை செய்து பின்னர் பெயர் மாற்றம் செய்துகொள்ளலாம் எனச் சொன்னார். நான் கொண்டுசென்ற ஆவணங்களைப் பார்க்காமல் அவர் கேட்ட பணம் கொண்டுவந்துள்ளீர்களா என கேட்டபோது நான் இல்லை என்று சொன்னேன். உடனே அவர் என்னிடம் எனது அப்பாவின் இறப்புச் சான்றிதழ், என் ஆதார் கார்டு, வாரிசு சான்றிதழ் ஆகியவற்றுடன் அவர் EB கனெக்சன் கொடுப்பதற்காக தனிப்பட்ட முறையில் அவருக்காக கேட்ட பணத்தை ஏற்பாடு செய்து கொண்டு தன்னை அலுவலகத்தில் வந்து நாளை 19.11.2025ம் தேதி காலையில் வந்து பார்க்குமாறு சொன்னார். உங்க EB சர்வீஸ் கனெக்சன்

கொடுப்பது என் கையில் தான் இருக்கு, பணத்தோடு வாங்க எல்லாம் சரி பண்ணிக்கிடுவோம், இல்லையென்றால் உங்களுக்கு வந்துள்ள EB சர்வீஸ் கனெக்சன் கேன்சல் செய்யப்படும் என்று கறாராக சொன்னார். நானும் சரி என்று சொல்லிவிட்டு வந்துவிட்டேன். பின்னர் நான் விசாரித்து பார்த்ததில் AE லட்சுமணன் சார் சொன்னதில் உண்மை இல்லை. மேலும் அவர் இவ்வளவு நாள் எங்கள் தோட்டத்தில் உபயோகத்திலிருந்த EB மீட்டர் பாக்சை எடுத்துச்சென்று வீட்டு வேண்டுமென்றே உள்நோக்கத்துடன் என்னிடம் பணம் பறிக்கும் எண்ணத்தில் புது EB சர்வீஸ் கனெக்சன் மற்றும் மீட்டர் பாக்ஸ் எனது அப்பா பெயரில் அமைத்து தர அவரது அதிகாரத்தை தவறாக பயன்படுத்தி ன்னனிடம் ரூ.20,000/- லஞ்சப்பணம் கேட்டுள்ளார். எனக்கு லஞ்சம் கொடுக்க விருப்பம் இல்லாததால் புகார் மனு தயார் செய்து இன்று 18.11.2025ம் தேதி மாலை தேனி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு வந்து ஆய்வாளர் அவர்களிடம் AE லட்சுமணன், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் தேவாரம் 1 பிரிவு அவர்கள் மீது உரிய சட்டப்படியான நடவடிக்கை எடுக்க கேட்டுக்கொள்கிறேன். எனது புகார் மனுவுடன் எனது தந்தையின் இறப்புச்சான்றிதழ், வாரிசு சான்றிதழ், எனது ஆதார் கார்டு ஆகியவற்றின் நகல்கள், செயற்பொறியாளர் P.பிரகலாதன் அவர்களின் க.எண்: செ.பொ/பகிர்/தேனி /தொ.நு.உ/ கோ.கட்டு/அ.எண்/2022 நாள் 30.06.2022 நகல் , தேனி மின் பகிர்மான வட்டம், மின் கட்டண ரசீது வரிசை எண்: 6693153, 6514419 ஆகியவற்றின் நகல்களையும் இணைத்துள்ளேன். திரு.லட்சுமணன் AE அவர்கள் லஞ்சமாக கேட்ட பணம் ரூ.20,000/-யும் கொண்டு வந்துள்ளேன். நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். இப்படிக்கு, தங்கள் உண்மையுள்ள. Sd/- XXXXX (M. Ramachandran 18.11.2025)

Sir, Received the complaint on 18.11.2025 at 18.00 hrs. A confidential verification was conducted in respect of the complaint as well as the complainant through sources and found to be genuine and good respectively. The reputation of the accused was also verified and found to be bad. Since, a prima facie case is made out in the complaint and after getting oral permission

from the DSP, V&AC, Dindigul FAC- Theni, the Superintendent of Police, Southern Range, Vigilance and Anti-Corruption, Chennai, a case in Theni, Vigilance and Anti-Corruption Crime No.03/2025, u/s 7 of the Prevention of Corruption Act 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act, 2018 was registered on 18.11.2025 at 20.00 hrs. Sd/- (T.Rameswari, Inspector of Police, V&AC, Theni).

The original FIR, original complaint of Tr.M.Ramachandran, S/o.C.K.Mani(late), ward No.10, D.No.50, Mallingar Kovil street, Uthamapalayam Tk, Thevaram Theni District along with copies of death certificate of Tr.C.K.Mani, legal heir certificate, Aadhar card of the complainant, letter in க.எண்: செ.பொ/பகிர்/தேனி /தொ.நு.உ/ கோ.கட்டு/அ.எண்/2022 dated 30.06.2022, TANGEDCO Theni circle, EB receipt Sl.Nos 6693153, 6514419 are sent to the Hon'ble Principle District and Sessions Judge, Theni District and copies are sent to the superior officers concerned.

T.R.
18.11.2025

(T.Rameswari)
Inspector of Police,
Vigilance and Anti-Corruption,
Theni Detachment.